# ஒருவர் இப்பொழுது சபைக்கு போக வேண்டுமா?



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள்
பேசிய செய்திகளிலிருந்து

# ஒருவர் இப்பொழுது சபைக்கு போக வேண்டுமா?

## SHOULD ONE GO TO CHURCH, NOW?

---

ஒவ்வொரு மனிதனுக்கும் தனக்கென்று ஒரு சபை இருக்க வேண்டும். உனக்கென்று ஒரு ஸ்தலம் இருக்க வேண்டும். ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு அலைந்து கொண்டிருக்கிறவர்களாய் இருக்கக்கூடாது. ஆனால் எங்காவது ஒரு சபைக்குப் போய், அது உன்னுடைய சபை என்று அழைக்க வேண்டும். எங்காவது நீ போய் உன்னுடைய தசமபாகத்தை செலுத்துகிறவனாக, எங்காவது போதனையை தாங்குகிறவனாக இருக்க வேண்டும். நீயாகவே அதை தெரிந்துகொள்.

**ஆவியை பகுத்தறிதல், மார்ச் 8, 1960, பத்தி எண் 18**

நீங்கள் வீட்டில் தங்கிவிடவேண்டாம். தேவன் உங்கள் இருதயத்தில் வாசம் செய்வாரானால், உங்கள் சகோதரருடன் ஐக்கியங்

கொள்ள, இக்கூடாரத்தின் கதவுகள் திறக்கும் வரைக்கும் உங்களால் காத்திருக்க முடியாது. அத்தகைய உணர்ச்சி உங்களில் இல்லையென்றால், நீங்கள் ஜெபத்தில் தரித்திருக்க வேண்டிய நேரம் இதுவே என்று உங்களிடம் கூற விரும்புகிறேன்.

**கிறிஸ்து தேவனுடைய பரமரகசியத்தின் வெளிப்படுதலாயிருக்கிறார், ஜூலை 28, 1963, பத்தி எண் 84**

நாம் கல்விமான்களாக நம்முடைய சொந்த வழிகளைப் பின்பற்றும் காரணத்தால், நம்மை நாமே தாழ்த்தி, ஒரு சிறிய மூலையில் நடத்தப்படும் ஊழியத்தில் தேவன் பிரசன்னராயிருப்பதைக் காணத் தவறிவிடுகிறோம். பாருங்கள்? அதுசரி. அதன் எளிமையின் காரணமாக நாம் இடறிவிடுகிறோம்.

**தேவன் எளிமையில் மறைந்திருந்து அதன்பின் அவ்விதமே தம்மை வெளிப்படுத்துதல், மார்ச் 17, 1963 காலை, பத்தி எண் 153**

நான் கவனித்தேன், எவ்வாறு சபைகள்; சுவிசேஷ ஊழியம் எல்லாவிடங்களிலும் பரம்பினது. அதன் பிறகு, பவுல் நமது

ஜனங்களுக்கு ஒரு பெரிய மிஷனரியாக விளங்கினதை நாம் உதாரணமாக எடுத்துக் கொள்வோம். தேவன் அவனை நடத்திச் சென்ற இடங்களுக்கெல்லாம் அவன் சென்று சபையை ஏற்படுத்தினான் என்று நாம் காண்கிறோம். அது ஒரு புதிய விசுவாசமாக இருந்தது. அந்நாட்களில் ஆசியா மைனரிலும் ஐரோப்பா முழுவதிலும் இருந்த சபைகள் அந்த செய்தியை விசுவாசிக்க வில்லை. ஆனால் அவன் செய்தியை பிரசங்கித்தபோது, அநேகர் மனம் மாறினார்கள். அங்கு ஒருவருமே இருக்கவில்லை... அவன் ஜனங்களை அந்நிலையில் விட்டு வந்தால், அவர்கள் மீண்டும் தங்கள் அஞ்ஞான தெய்வங் களிடத்துக்கும், யூத மார்க்கத்துக்கும் திரும்பிச் சென்று விடுவார்கள், ஏனெனில் மனம் மாறின வர்களுக்கு போதிக்க ஒருவரும் இருக்கவில்லை. அவர்கள் போவதற்கு ஒரு இடமும் இருக்க வில்லை. எனவே, பவுல், தேசத்தின் வெவ்வேறு பகுதிகளில், சபைகளை ஏற்படுத்தினான்.

அந்த சபைகள் ஒவ்வொன்றுக்கும் அவன் ஒழுங்குக்குட்பட்ட, நம்பத்தகுந்த ஒரு மனிதனை வைத்து விட்டு வந்தான். இந்த

மனிதன் மேய்ப்பன் (Pastor) என்று அழைக்கப் பட்டான். இந்த சபைக்குப்பிறகு... பல்வேறு சிறு சபைகள் இதிலிருந்து எழும்பின. இளைஞர்களும் வயதில் மூத்தோரும் எழும்பி, அதிலிருந்து சபைகளை உண்டாக்கிக் கொண்டனர். முதலாம் சபைக்கு தலைவனாக இருந்த மனிதன் கண்காணிப்பாளன் (bishop) என்று அழைக்கப் பட்டான். அவனை விட்டுச் சென்ற அவனுடைய பிள்ளைகள், மேய்ப்பர்கள் என்று அழைக்கப் பட்டனர். இந்த சிறு சபைகள் எல்லாமே இந்த கண்காணிப்பாளரிடத்தில் வந்தனர்.

**இயேசுவின் பட்சம் சேர்ந்திருத்தல், ஜூன் 1, 1962**
**மாலை, பத்தி எண் 26–27**

ஜனங்கள் சபைக்குப் போவதில் எனக்கும் கூட நம்பிக்கை இல்லையென்று அவர்கள் எண்ணுகின்றனர். அது உண்மையி லிருந்து பத்து இலட்சம் மைல்கள் அப்பாலுள்ளது. “நாளானது சமீபித்து வருவதை நாம் எவ்வளவு அதிகமாக பார்க்கிறோமோ அவ்வளவு நாம் ஒன்றாக கூடி வந்தாக வேண்டும்.” பாருங்கள்? நாம் ஒரே இசைவோடு ஒன்றாக கூடி வந்தாக வேண்டும்.

*****

நான் எதன் பட்சமாக இருக்கிறேன் என்பதை ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள நான்—நான்... விரும்புகிறேன். நான் கிறிஸ்தவர்களுடன் ஒன்றாக கூடி வந்து, அங்கே ஆராதித்து கர்த்தரை சேவிக்கிறேன்.

**தேவசித்தத்திற்கு புறம்பாக அவருக்கொரு சேவை செய்ய முயற்சித்தல், நவம்பர் 27, 1965, பத்தி எண் 26, 27**

சபைக்கு போவதில் எனக்கு நம்பிக்கை இல்லையென்றால், நான் ஏன் சபைகளை கொண்டிருக்கிறேன்? நாம் சபைகளை தேசம் முழுவதும் கொண்டிருந்தோம். அன்றொரு இரவு (தொலைபேசி மூலம்) இணைக்கப்பட்டிருந்தோம், ஒவ்வொரு இருநூறு சதுர மைல்களிலும் என் சபைகளில் ஒன்றை கொண்டிருந்தேன்.

**தேவசித்தத்திற்கு புறம்பாக அவருக்கொரு சேவை செய்ய முயற்சித்தல், நவம்பர் 27, 1965, பத்தி எண் 88**

நாம் நினைப்பதைக் காட்டிலும் காலதாமதமாக உள்ளது. ஒரு சாய்விருக்கையை (pew) நிரப்பும்படி நாம் சபைக்கு வருவதில்லை;

ஒரு நல்ல செய்தியை கேட்பதற்கு நாம் சபைக்கு வருவதில்லை, அல்லது நல்ல இசையை கேட்க சபைக்கு வருவதில்லை. அவைகளெல்லாம் தங்களுடைய இடத்தை எடுத்துக் கொண் டுள்ளன, ஆனால் நாம் எதற்காக சபைக்கு வருவது நல்லதென்றால் தேவனுடன் பரிசோதனை செய்வதற்கும், நம்முடைய ஆத்தும இரட்சிப்பிற்காகவும், மீட்பின் நாள் சமீபமா யிருக்கிறது என்பதற்காகவுமே.

**கர்த்தருடைய இரண்டாம் வருகை, ஏப்ரல் 17, 1957, பத்தி எண் 54**

ஒரு—ஒரு குடும்பமானது எப்பொழு தாவது குடும்பத்தின் பேரிலுள்ள அதனுடைய மரியாதையை இழக்குமானால் (பிள்ளைகள் பெற்றோர்களின் பேரிலுள்ள மரியாதையை இழத்தல்), அந்த குடும்பமானது துண்டு துண்டாக கிழிக்கப்பட்டு விடும். ஒரு—ஒரு சபையானது அதனுடைய மேய்ப்பரைக் குறித்த மரியாதையை எப்பொழுதாவது இழக்குமானால், ஏன் அது—அது—அது— அந்த சபையும் போய்விடும்.

**எபிரேய புஸ்தகத்தின் பேரில் கேள்விகளும் பதில்களும் – பாகம் 3, அக்டோபர் 6, 1957, பத்தி எண் 769**

நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? நாம் கடைசி காலத்தில் இருக்கிறோம், நாம் இங்கே இருக்கிறோம். கையெழுத்து சுவரின் மேலுள்ளது, இரண்டாம் வருகை சமீபமாயுள்ளது, மணவாட்டி தெரிந்தெடுக்கப்பட்டாயிற்று, தண்ணீர் ஊற்றப்பட்டாயிற்று, தண்ணீர் மொள்ளப் பட்டாயிற்று.

இப்பொழுது அது சபையிலிருந்து மொள்ளப்பட்டதாக அர்த்தம் கொள்ளவில்லை, ஸ்தாபனத்துவத்திலிருந்து மொள்ளப்பட்டதாகவே அர்த்த மாகிறது. நீங்கள் கட்டாயம் சபைக்கு போயாக வேண்டும், ஆனால் எந்த அமைப்பை யும் சேர்ந்து கொள்ள வேண்டாம். இயேசு எல்லா ஸ்தாபனங்களுடனும் (organizations) சென்றார், ஆனால் அவர் அவைகளில் ஒன்றையும் சேர்ந்து கொள்ளவில்லை.

**தேவசித்தத்திற்கு புறம்பாக அவருக்கொரு சேவை செய்ய முயற்சித்தல், நவம்பர் 27, 1965, பத்தி எண் 332, 333**

இங்கிருக்கும் சபையானது இவைகளை அறிந்துகொள்ள வேண்டியதில்லை... ஆகவே எதைக் குறித்தும் வியாக்கியானம் கூற வேண்டாம். பாருங்கள்? உங்களுக்கு என்ன அறிவிக்கப்பட்டதோ அதை நினைத்துக்கொண்டு ஒரு கிறிஸ்தவ ஜீவியம் செய்து முன்னேறுங்கள். உங்கள் சபைக்குச் செல்லுங்கள். நீங்கள் எங்கிருக்கிறீர்களோ அங்கே ஒரு உண்மையான ஒளியாக இருங்கள். கிறிஸ்துவுக்காக வாஞ்சை யுள்ளவர்களாய் இருந்து, நீங்கள் எவ்வளவாய் அவரை நேசிக்கிறீர்கள் என்பதை மக்களுக்குக் கூறுங்கள். எப்பொழுதும் உங்கள் சாட்சியை அன்புடன் மக்களிடம் பகிர்ந்து கொள்ளுங்கள். பாருங்கள்? மாற்றி கூறுவீர்களானால், நீங்கள் பாதையை விட்டு விலகினவர்களாய் இருப்பீர்கள்.

**முத்திரைகள் மீதுள்ள கேள்விகளும் பதில்களும்,**
**மார்ச் 24, 1963 காலை, பத்தி எண் 16**

“மணவாட்டி எந்த சபைக்கும் செல்லக் கூடாது, நீர் அங்கு பிரசங்கம் பண்ணினா லொழிய, அல்லது இந்த கூடாரத்திற்கு மட்டும் வரலாம் என்று நீர் போதிக்கிறீரா?” இல்லை! நான் அவ்விதம் போதிப்பதில்லை. அதை நான்

நம்புவது கிடையாது. இங்கு ஊழியக்காரர் அமர்ந்துள்ளனர், அவர்கள் நாடெங்கும் பரவி யுள்ளனர், அவர்கள் அந்த மணவாட்டியின் பாகம் என்று நான் நம்புகிறேன். வார்த்தையை போதிக் கின்ற, அவர்களுக்கு விருப்பமான எந்த சபைக்கும் ஒரு மனிதனோ அல்லது ஒரு ஸ்திரீயோ செல்லலாம் என்பது என் கருத்து. அவர்கள் முழு வார்த்தையைப் போதிக்கின்ற, வேறெந்த சபைக்கும் உங்களால் போக முடியாமல் போனால், நீங்கள் முழு வார்த்தை யைப் போதிக்கின்ற இடத்துக்கு செல்லும் வரைக்கும், பாதி வார்த்தையை அவர்கள் போதிக்கும் அந்த இடத்துக்குச் செல்லுங்கள். நீங்கள் என்ன செய்த போதிலும், சபைக்குச் செல்லுங்கள். அதைச் செய்யுங்கள்.

“மேலும் வேலை செய்தல், மீன் பிடித்தல் போன்ற விஷயத்தில் நாம் ஞாயிற்றுக் கிழமை அனுசரிக்க வேண்டிய அவசியமில்லை என்று நீர் போதிக்கிறீரா?”

நீங்கள் ஞாயிற்றுக்கிழமையில் சபைக்குப் போவதற்கு பதிலாக, மீன் பிடித்தல், வேட்டை

யாடுதல், வேலை செய்தல் போன்றவைகளை செய்தால், அது பாவம் என்பது என் கருத்து. நீங்கள் தேவனுடைய கட்டளைகளை மீறுகிறவர் களாய் இருப்பீர்கள். “அப்படி ஒரு கட்டளை உள்ளதா?” ஆம், ஐயா! பழைய ஏற்பாட்டில் ஓய்வு நாள் ஒரு முன்னடையாளமாக கொடுக்கப் பட்டுள்ளது. அது அனைத்தும்... நீங்கள் ஓய்வு நாளை ஆசரிக்க வேண்டும் என்பதற்காக இயேசு வரவில்லை. பழைய ஏற்பாட்டின் ஓய்வு நாள் சனிக்கிழமை, அது வாரத்தின் முடிவு. ஞாயிற்றுக்கிழமை எட்டாம் நாள், அல்லது வாரத்தின் முதலாம் நாள், அந்த நாளில் தான் இயேசு உயிரோடெழுந்தார்.

நான் நினைக்கவில்லை அது சரியென்று... நீங்கள் தொலைவில் காட்டில் எங்காவது வேட்டை பயணத்தை மேற்கொண்டு சென்றிருந் தால், அதை சுற்றிலும் சபை எதுவுமில்லை என்றால், உங்களால் ஒன்றும் செய்ய முடியாத நிலை என்றால்; அப்பொழுது நீங்கள் மீன் பிடித்தால், அதனால் பரவாயில்லை என்று எண்ணுகிறேன். ஆனால் நீங்கள் நகரில், அல்லது சபை நடந்து கொண்டிருக்கும்

இடத்துக்கு அருகாமையில் இருந்தால், நீங்கள் எப்படியாவது எங்காவது சபைக்கு சென்றே ஆக வேண்டும்.

**கேள்விகளும் பதில்களும் (2:21), ஆகஸ்டு 30, 1964 காலை, பத்தி எண் 122–125**

அவரில் நீங்கள் அன்பு கூருகின்றீர்களா? (சபையார் "ஆமென்" என்கின்றனர் – ஆசி) அவர் அதிசயமானவரல்லவா? (ஆமென்) ஓ, இது இல்லாமல் நான் என்ன செய்ய முடியும்? 'மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவ னுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்.' ஓ, ஆண்டவரே, உம் வார்த்தையினால் என்னைப் போஷித்தருளும்.

"சபை கூடிவருதலை அவிசுவாசிகள் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டு விடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம். நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய் பார்க்கிறீர்களோ அவ்வளவாய் புத்தி சொல்ல வேண்டும்"

**ஏழு சபையின் காலங்களுக்கும் ஏழு முத்திரைகளுக்கும் இடையேயுள்ள பிளவு, மார்ச் 17, 1963 மாலை, பத்தி எண் 327–328**

இப்பொழுது அதைக் குறித்த ஒலிநாடாக்கள் உங்களிடம் இருக்கின்றன. நாம் விசுவாசிக்கும் போதகங்களின் ஒலிநாடாக்கள் உங்களிடம் உள்ளன. சபையில் கடைபிடிக்க வேண்டியதைக் குறித்த ஒலிநாடாக்களும் உங்களிடம் உள்ளன – நாம் தேவனுடைய சபையில் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்றும், நாம் எவ்விதம் இங்கு ஒன்று கூடி உன்னதங்களில் ஒருமித்து உட்கார வேண்டும் போன்றவை. நீங்கள் வீட்டில் தங்கிவிட வேண்டாம். தேவன் உங்கள் இருதயத்தில் வாசம் செய்வாரானால், உங்கள் சகோதரருடன் ஐக்கியங்கொள்ள, இக்கூடாரத்தின் கதவுகள் திறக்கும் வரைக்கும் உங்களால் காத்திருக்க முடியாது. அத்தகைய உணர்ச்சி உங்களில் இல்லையென்றால், நீங்கள் ஜெபத்தில் தரித்திருக்க வேண்டிய நேரம் இதுவே என்று உங்களிடம் கூற விரும்புகிறேன்.

ஏனெனில் நாம் கடைசி நாட்களில் இருக்கிறோம். வேதாகமமானது உயர்த்தினது...

இந்நாட்களில் "நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய் பார்க்கிறோமோ அவ்வளவாய் நாம் ஒருவரிலொருவர் அந்த திவ்விய அன்பில் – கிறிஸ்தவ அன்பில் – அன்பு கூர்ந்து, நாம் சபை கூடி வந்து கிறிஸ்து இயேசுவுக்குள் அவரோடு கூட உன்னதங்களில் உட்காருவோம்." "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள்." அது உண்மை, நீங்கள் ஒற்றுமையாக இருங்கள்.

சகோதரன் அல்லது சகோதரி யாராகிலும் தவறு சிறிது செய்துவிட்டனர் என்று நீங்கள் நினைத்தால், "ஆண்டவரே, கசப்பான வேர் முளைத்தெழும்ப அனுமதிக்க வேண்டாம். ஏனெனில் அது அவரையும் பாதிக்கும், என் வாழ்க்கையிலிருந்தும் அது கிறிஸ்துவை எடுத்துப்போடும்" என்று ஜெபியுங்கள். குரோதம், விரோதம், பகை என்னும் விஷ அமிலம் உங்களிடமிருந்து பரிசுத்த ஆவியை எடுத்துப் போட்டு விடும். அது அவரை இந்த கூடாரத்திலிருந்து ஓட்டி விடும். அது தேவனுடைய ஆவியை அழித்து விடும். இல்லையேல் அதை

உங்களைவிட்டு ஓட்டி விடும். உங்கள் போதகரின் மனதை அது புண்படுத்தும். அது எல்லாவற்றையும் செய்துவிடும். பாருங்கள்? நீங்கள் அப்படி செய்ய வேண்டாம்.

**கிறிஸ்து தேவனுடைய பரமரகசியத்தின் வெளிப்படுதலாயிருக்கிறார், ஜூலை 28, 1963, பத்தி எண் 84–86**

நாங்கள் குதிரை சவாரி செய்கிறோம். நாங்கள் அங்காடிக்குச் சென்று பொருட்களை வாங்குகிறோம். நாங்கள் வேட்டைக்கும் மீன் பிடிக்கவும், எங்களுக்கு இன்பம் தரும் இவை களைச் செய்கிறோம். ஆனால் ஆலயம் திறக்கப்படும் போது எங்கள் கர்த்தரை நாங்கள் சந்திக்க விரும்புகிறோம். “என்றென்றைக்கும் கர்த்தருடனே கூட இருந்து அவருடன் அவருடைய சிங்காசனத்திலே உட்கார்ந்து கொண்டிருப்போம்” என்னும் உம்முடைய வாக்குத்தத்தம் எல்லாவற்றைக் காட்டிலும் மேலானது.

**நான் எப்படி ஜெயங்கொள்வது?, ஆகஸ்டு 25, 1963, பத்தி எண் 195**

**18. நம்முடைய கர்த்தரும் இரட்சகரு மாகிய இயேசு கிறிஸ்து நாம் ஆரா தனைக்காக கர்த்தருடைய வீட்டிற்குள் எவ்விதமாக வரவேண்டும் என்று எதிர்பார்க் கிறார் என்பதை எங்களுக்கு தயவுகூர்ந்து கூறுவீரா?**

அது சரி, அது அருமையான ஒன்றாகும். ஒவ்வொரு சபைக்கும் அது தேவையான ஒன்றாகும். சபைக்கு நீங்கள் வரவேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார்... இப்பொழுது, இது ஒரு கேள்வியாகும், வெளிப்படையான ஒரு கேள்வி யாகும். இது வேதப்பூர்வமான ஒன்றா; அது—ஆம் அதுதான். பொறுங்கள், அவர் என்ன கூறினார் என்று நான் உங்களிடம் கூறுகிறேன். முதலாவ தாக, வேதவசனம் நீங்கள் விரும்புவீர்களானால், ஜனங்கள் தேவனுடைய வீட்டிற்கு ஒரு நோக்கத் திற்காகத்தான் வரவேண்டியவர்களாயிருக்கின் றனர், அது ஆராதிக்கத்தக்கதாக, பாடல்கள் பாடுவதற்காக, மற்றும் தேவனை தொழுது கொள்ளத்தக்கதாக, அந்த விதமாகத்தான் தேவன் அதை எதிர்பார்க்கின்றார். நாம்

தேவனுடைய வீட்டிற்கு வந்து நம்முடைய – அல்லது வேறெதைக் குறித்தோ, அல்லது ஒரவரைக் குறித்து ஒருவர் பேசிக்கொள்வதோ, அல்லது வாரம் முழுவதும் நாம் என்ன செய்ய வேண்டும் என்பவைகளைக் குறித்தோ பேச தேவன் எதிர்பார்ப்பதில்லை, நாம் வந்து அவரை ஆராதிப்பதையே அவர் எதிர்பார்க்கிறார். அது ஆராதனையின் வீடாக இருக்கிறது. “சகலமும் ஒழுங்கும் கிரமுமாக நடைபெற வேண்டும்” என்று பவுல் வேதாகமத்தில் கூறியுள்ளான். எல்லா காரியமும் சரியாக இருக்க வேண்டியதா யுள்ளது. செய்தியும் இருக்க வேண்டும்.

**கேள்விகளும் பதில்களும்** (COD 1:3), **ஜனவரி 3, 1954, பத்தி எண் 111**

விழுந்து போயுள்ளவர்களே, புதன்கிழமை களிலும், சபை ஆராதனை இருக்கின்ற மற்ற இரவுப் பொழுதுகளிலும் வீட்டிலேயே இருந்து கொண்டு இங்கே சபைக்கு வராமல் தொலைக் காட்சிகளை பார்த்துக் கொண்டிருப்பவர்களே! சற்று சிந்தியுங்கள், நீங்கள் – நீங்கள் சற்று உண்மையைக் கூறுங்கள், நீங்கள் சபைக்கு வரவேண்டுமென்றால், அப்படிச் செய்வதற்கு

உங்களையே நீங்கள் நிர்ப்பந்தம் பண்ண வேண்டியவர்களாக இருக்கிறீர்கள், ஏனென்றால் அப்படிச் செய்தாக வேண்டும் என்பது ஒரு கட்டாயம் என்று நினைப்பதாலேயே. நீங்கள் அதை செய்துதானாக வேண்டும். அப்படிச் செய்வது ஒரு கனம் மிக்க, நற்சிறப்புமிக்க ஒரு காரியமாகும். அப்படிச் செய்வதற்கு உங்களுக்கு விருப்பமில்லையெனில் ஏதோ தவறு காணப் படுகின்றது. பரிசுத்த ஆவி நீங்கள் தேவனை ஆராதிக்கும்படியாக விருப்பங்கொள்ள செய்கின்றது.

**எல்லாவற்றையும் விட்டுவிடுதல், ஜனவரி 23, 1962, பத்தி எண் 260**

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. வார்த்தையானது உரைக்கப் பட்டாயிற்று; அது நிறைவேறியாக வேண்டும். அது நிறைவேறும். அருமையானவர்களே, யாரும் மரிக்க விரும்புவ தில்லை. யாரும் அழிந்து போக விரும்புவ தில்லை. உங்கள் ஸ்தாபனங்களுக்கு நீங்கள் எவ்வளவு உத்தமமாக இருந்தாலும் எனக்குக் கவலையில்லை. அப்படி இருப்பது நல்லது தான். உங்கள் பேரில் எனக்கு எவ்வித விரோதமும்

கிடையாது. நீங்கள் ஆலயத்திற்குச் செல்ல வேண்டும். நீங்கள் தொடர்ந்து செல்லுங்கள். ஆனால் உங்கள் பாரம்பரியங்களைத் தூர எறிந்து விட்டு, கிறிஸ்துவை நோக்கிச் சென்று, அவருக்குள் மறைந்து கொள்ளுங்கள். என்றாவது ஒருநாளில் எக்காளம் தொனிக்கும். நீங்கள் எடுத்துக் கொள்ளப்படாவிடில் மிருகத்தின் முத்திரையை நீங்கள் அறியாமலேயே தரித்துக்கொள்ள நேரிடும். அப்பொழுது காலதாமதமாயிருக்கும்.

**ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல், டிசம்பர் 4, 1965, பத்தி எண் 206**

நாங்கள் மகிழ்ச்சி கொண்டிருக்கிறோம். “கர்த்தருடைய ஆலயத்திற்கு போவோம் வாருங் கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன்” என்று ஒருமுறை சொல் லப்பட்டது என்று நினைக்கிறேன். கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவது கிறிஸ்தவனின் சிலாக்கியமும் மகிழ்ச்சியுமாம்.

**கல்வாரியில் அந்த நாள், செப்டம்பர் 25, 1960, பத்தி எண் 4**

நீங்கள் ஒரு கிறிஸ்தவனாயிருக்கும் பொழுதே, உங்களுடைய சுபாவமே ஒரு கிறிஸ்தவனாக இருக்கிறது. "இப்பொழுது உன்னால்—உன்னால்—உன்னால் முடியாது, உன்னால் புகைக்க முடியாது, உன்னால் குடிக்க முடியாது. உன்னால் அதை செய்ய முடியாது" என்று நீ கூற வேண்டியதில்லை. நீங்கள் அதைக் கூற வேண்டியதில்லை, எப்படி இருந்தாலும் அவர்களால் அதைச் செய்ய முடியாது. புரிகின்றதா? அவர்களுடைய சுபாவமே வித்தியாசமாய் இருக்கிறது. கிறிஸ்துவின் ஆவி அந்த நபருக்குள் இருக்கிறது. கிறிஸ்து அந்த காரியங்களைச் செய்கிறதில்லை. புரிகின்றதா?

"நீங்கள் கர்த்தரை நேசிக்க வேண்டும். நீங்கள் சபைக்கு போய்த்தானாக வேண்டும்" என்று நீங்கள் கூறுகிறீர்கள். அந்த ஜனங்களிடத்தில் நீங்கள் அதைக் கூற வேண்டியதில்லை. எப்படியிருந்தாலும் அவர்கள் போகிறார்கள். அவர்கள் மழைகளினூடாக நடப்பார்கள். அவர்கள் போவார்கள். அவர்கள் சபைக்குப் போக, மரணத்தினூடாக போய்க் கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக, அவர்கள் அதை நேசிக்

கிறார்கள். அவர்கள் அங்கே சென்றாக வேண்டும். அங்கேயிருக்கிறதெல்லாம் அவ்வளவு தான். அது அவர்களுடைய ஜீவனாய் இருக்கிறது. அவர்களுக்கு ஜீவனில்லையென் றால், அவர்கள்—அவர்கள் அழிந்து கொண் டிருக்கின்றதைப் போன்று அவர்கள் உணருவார் கள். நிச்சயமாக ஆம். ஐயா. எப்பொழுதுமே ஏதோ காரியம் உங்களுடைய இருதயத்திற்குள் ளாக எரிந்து கொண்டிருக்கும்பொழுது, நீங்கள் சரியாக அங்கே போயாகத்தான் வேண்டும். இப்பொழுது அங்கே வாதிடுவதற்கு போவதல்ல, அங்கே குழப்பத்தை உண்டு பண்ணுவதற்கு போவதல்ல. ஆனால் ஆராதிப்பதற்கு அங்கே சேல்வதே. என்னே! நீங்கள் புதுக்கிளர்ச்சி யூட்டப்பட்டு வீட்டிற்கு செல்கிறீர்கள். அது ஒரு அற்புதமான ஜீவியமல்லவா? எத்தனை பேர் அதைக் கண்கூடாக அறிந்திருக்கிறீர்கள்? நாங்கள் உங்களுடைய கரத்தை காணட்டும். ஓ!

**தேவன் தம்முடைய வார்த்தையை காத்துக்கொள்கிறார், ஏப்ரல் 7, 1957, ஞாயிறு காலை, பத்தி எண் 248–249**

சபை உங்களை கிறிஸ்தவர்களாக ஆக்குவது கிடையாது. நீங்கள் கிறிஸ்தவர்களாக இருக்க சபை உதவி செய்கிறது. நீங்கள் எதற்குள் பிறந்தீர்களோ அதில் நிலைத்திருக்க; நீங்கள் ஒரே வலையேறப்பெற்ற விசுவாசத்தைக் கொண்ட சகோதரர்களுடன் ஐக்கியங்கொள்ளும் போது, நீங்கள் பெற்றுள்ள விசுவாசத்தில் நிலைத்திருக்க அது உதவி செய்கிறது.

**வருகின்ற புயல், மார்ச் 2, 1960, பத்தி எண் 20**

“அவர் ஏன் நீண்ட நேரம் பிரசங்கம் செய்கிறார்? இதெல்லாம் என்ன?” என்று நீ கூறுவதும் அவ்வாறேயுள்ளது. நீ அன்பு கொள்ளாமல் இருக்கிறாய்.

ஆனால், இன்று காலை பரிசுத்த ஆவியானவர் உனக்கு எச்சரிக்கை விடுத்தது போல, நீ ஒவ்வொரு வார்த்தையையும் இறுகப் பற்றிக் கொண்டால்! ஒவ்வொரு வார்த்தையையும் இறுகப்பற்றி கொள்ளுதல். அதைக் குறித்து தான் ஒருக்கால் அவர் உங்களுக்கு உரைத்திருப் பார். இறுகப்பற்றி கொள்ளுதல்! அது நித்திய ஜீவன் – தேவனுடைய வார்த்தை ஒவ்வொன்றும்.

சூழ்நிலை என்னவாயிருப்பினும், சபைக்கு செல்லுதல் மகிழச்சியூட்டுகின்றது. அது வெயிலா னாலும், குளிரானாலும், அலட்சியமானாலும், ஜனங்கள் வீண் சந்தடி செய்தாலும், உறுமினா லும் – அவர்கள் என்ன செய்தாலும் – தேவனு டைய வார்த்தையைக் கேட்பது மகிழ்ச்சியளிக் கிறது என்றால், நீ உண்மையாகவே கிறிஸ்து வின் மேல் அன்பு கொண்டிருக்கிறாய். நீ சபைக்குச் செல்ல பிரியப்படுவாய்.

“அன்பே, ஞாயிறு காலை வந்து விட்டது. நாம் பிள்ளைகளுக்கு முகம் கழுவி, அங்கு செல்ல வேண்டும். அது சலிப்பாயுள்ளது” என்பானாகில் நீ அவர்பால் அன்பு கொள்ளவில்லை.

நீ உண்மையாகவே அவரில் அன்பா யிருந்தால், ஞாயிறு காலை வரும் வரை உன்னால் காத்திருக்க முடியாது. அவர்களுடன் ஒன்று கூட நீ எப்படியாவது சென்று விடுவாய்... தேவனுடைய ஜனங்கள் உன்னை சலிப்படைய செய்வதில்லை. அவர்கள் உன் சகோதரரும் சகோதரிகளுமாயுள்ளனர். “சோர்கமில்

கிடைக்கும் வெல்லப்பாகு குளிர்மிகுந்த காலத்தில் கெட்டியாவது போல் நீங்கள் ஆகிவிடுகின்றீர்கள்" என்று நான் கூறுவதுண்டு. அதை ஊற்ற முடியாது அது ஒன்றோடொன்று ஒட்டிக்கொள்ளும், அது இறுகி விடும். இந்த உதாரணம் அவ்வளவு நல்லதல்ல, எனினும் நான் கூற விரும்புவதை இந்த உதாரணத்தின் மூலம் உங்களுக்குத் தெரிவிக்கிறேன். பாருங்கள், நீங்கள் ஒருவரோடொருவர் ஒட்டிக்கொண்டிருக் கிறீர்கள். குளிர் அதிகமாகுந்தோறும், அது இன்னும் இறுக்கமாக ஒட்டிக்கொள்கின்றது. அப்படித்தான் நாம் இருக்க வேண்டும்.

**உலகின் நண்பர்கள் கைவிடும்போது**

**நான் அவரை இன்னும் இறுகப் பற்றிக் கொள்கிறேன்**

நாம் முக்கியமானவர்கள் என்பதனால் ஒருவரிலொருவர் அன்பு கூருவதில்லை. நம் ஒவ்வொருவருக்குள் இருக்கும் கிறிஸ்துவிலேயே நாம் அன்பு கூருகிறோம். நமக்குள் வாசம் செய்யும் தேவனில் நாம் அன்பு கூருகிறோம்.

நாம் ஒன்று கூட பிரியப்படுகிறோம். இந்த பழைய பாடலை நாம் பாடுவதுண்டு:

**நமது இருதயத்தைக் கிறிஸ்தவ அன்பினால்**
**பிணைக்கும் உறவு ஆசீர்வதிக்கப்படுவதாக**
**ஒரே சிந்தை கொண்டுள்ள ஐக்கியம்**
**பரத்தில் உள்ளதற்கு ஒப்பானது**

பாருங்கள், ஒரே சிந்தை கொண்டுள்ள ஐக்கியம் பரத்தில் உள்ளதற்கு ஒப்பானது.

**பிதாவின் சிங்காசனத்திற்கு முன்பாக**
**நமது ஆர்வமான ஜெபத்தை ஊற்றுகிறோம்**
**நமது பயங்கள், நமது நம்பிக்கைகள், நமது குறிக்கோள்கள்**
**நமது சௌகரியங்கள், நமது கவலைகள் எல்லாமே ஒன்றாயுள்ளது**

பாருங்கள்? ஆம், ஐயா! ஒருவர் ஆசீர்வதிக்கப்பட்டால், நாம் அனைவருமே மகிழ்ச்சி கொள்கிறோம். ஒருவர் துக்கப்பட்டால், நாம் அவருடன் துக்கப்படுகிறோம். நாம் அனைவரும் ஒன்றாயிருக்க விரும்புகிறோம். நாம்

அப்படித்தான் இருக்க வேண்டியவர்களா யிருக்கிறோம்.

*****

ஒரு மனிதனோ அல்லது ஸ்திரீயோ சபைக்குச் செல்வதைக் குறித்து குறை கூறி, அங்கு செல்ல சலிப்படைந்தால், அவர்கள் யாத்திரைக்கு ஆயத்தமாகவில்லை. அது உண்மை. எங்கோ தவறுள்ளது.

**என்றென்றும் பிரசன்னமாயுள்ள கன்மலையின் தண்ணீர், ஜுலை 23, 1961, பத்தி எண் 73–78, 80**

நாம் சபையில் ஒருவரோடொருவர் கொண்டுள்ள ஐக்கியத்தினின்றும், பரிசுத்த ஆவியானவருடன் கொண்டுள்ள ஐக்கியத்தி னின்றும் விலகி விடும் போது, அது நம்மை உலர்ந்த இடம் அல்லது பாலைவனத்திற்கு கொண்டு வருகிறது. அங்கு ஒன்றுமே உயிர் வாழ்வதில்லை. ஒட்டிக்கொள்ளும் பிசினைக் கொண்ட முட்செடி மாத்திரமே அங்குள்ளது. அது என்ன தெரியுமா? அது தண்ணீர் பெறாத மிருதுவான இலை. தண்ணீர் இல்லாததினால் அது இறுகச் சுற்றிக் கொண்டு பிசினாகி

விட்டது. அப்படிப்பட்ட ஒருவரை நீங்கள் காணும் போது, அதற்கு மாத்திரம் சரியானபடி தண்ணீர் கிடைத்திருந்தால், அது ஒரு விலையேறப் பெற்ற ஆத்துமாவாயிருக்கும். அதற்கு பதிலாக அது தன்னை இறுகச் சுற்றிக் கொண்டு பிசினாகி விட்டு, எல்லாவற்றிலும் குறை கண்டுபிடிக் கின்றது. அதற்கு சற்று தண்ணீர் கிடைத்தால் போதும் – ஒரு எழுப்புதல். அவ்வளவுதான், தேவனிடமிருந்து ஒரு புத்துணர்ச்சி. அதற்கு தண்ணீர் கொடுத்தால், அது தன்னை அவிழத்துக் கொள்ளும்.

**என்றென்றும் பிரசன்னமாயுள்ள கன்மலையின் தண்ணீர், ஜூலை 23, 1961, பத்தி எண் 88**

## 256. சகோ. பிரான்ஹாமே, நம்முடன் வேற்றுமை கொண்டிருக்கும் மற்ற சபைகளுக்கு நாம் போகலாமா?

நிச்சயமாக, ஆம்! அவர்கள் இயேசுவுடன் வேற்றுமை கொண்டிருந்த போதிலும், அவர் அங்கு சென்றார். போங்கள். “நம்முடன் வேற்றுமை கொண்டிருக்கும் மற்றொரு சபைக்கு நாம் செல்லலாமா?” என்று கேட்கப்பட்டுள்ளதை

இங்கு நாம் கவனிக்கிறோம். நிச்சயமாக, நான்... நான் கடற்கரையிலுள்ள ஒரே ஒரு கூழாங்கல் அல்ல, உங்களுக்குத் தெரியும். தேவபக்தியுள்ள மற்ற மனிதர் எல்லாவிடங்களிலும் உள்ளனர். அவர்களில் நானும் ஒருவன் என்று நம்புகிறேன். பாருங்கள்? ஆனால் நீங்கள் இங்கு வந்து...

அன்றொரு நாள் இது போன்ற ஒன்றைக் குறித்து என்னிடம் கேட்கப்பட்டது. அரிசோனாவிலுள்ள ஒரு குழு இதைக் குறித்து என் கவனத்தை ஈர்த்தது. போதகர் குழு ஒன்று என்னிடம், "சகோ. பிரான்ஹாமே, உங்களுக்கு விரோதமாக எங்களுக்குள்ள ஒரே ஒரு காரியம் (பல காரியங்களில் ஒன்று) என்னவெனில், உங்களுடன் இங்கு வரும் மக்களை, வேறெந்த சபைக்கும் போக வைக்க எங்களால் முடியவில்லை. அவர்களுக்கு பிள்ளைகள் உள்ளனர், ஆனால் அவர்கள் சபைக்குச் செல்ல மறுக்கின்றனர்; எங்கள் சபைக்கு வருவதற்கு அவர்கள் வரவேற்கப்படுகின்றனர் என்று நாங்கள் சொன்ன போதிலும்" என்றனர்.

நீங்கள் அவர்களுடைய சபைகளில் சேர்ந்துகொள்ள உங்களை வற்புறுத்துகின்றனர் என்பதை அறிவேன், ஆனால் நீங்கள் சேர வேண்டிய அவசியமில்லை; உங்கள் பிள்ளை களை எங்காவது ஞாயிறு பள்ளிக்கு அனுப்புங் கள். நீங்கள் சபைக்குச் செல்லுங்கள். ஞாயிற்றுக் கிழமையில் வீட்டில் உட்கார்ந்து கொண் டிருக்கவோ, மீன்பிடிக்கவோ, வேட்டைக்கோ செல்லாதீர்கள்.

நீங்கள், “நல்லது, நான் சட்டதிட்டங்களை கடைபிடிக்கும் ஒருவன் அல்ல (legalist)” எனலாம்.

நல்லது. நீங்கள் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை அவமதிக்காமல், சிறிது காலம் அவ்விதம் இருப்பது நல்லது. நீங்கள் எங்காகிலும் சபைக்குச் செல்லுங்கள்.

*****

நான் பீட அழைப்பு கொடுக்கும் போது, நான் கூறுவதைக் கேட்டிருக்கிறீர்களா? நான் கூறுவது என்னவெனில்… அவர்களை எழுந்து நிற்கச் செய்து, அவர்களை இரட்சிப்படையச் செய்த

பிறகு, நான், “உங்கள் வீட்டிற்கு அருகிலுள்ள ஏதாகிலும் ஒரு நல்ல முழு சுவிசேஷ சபைக்குச் சென்று அதை உங்கள் சபையாக்கிக் கொள்ளுங் கள்” என்று கூறுவது வழக்கம். அவ்விதம் நான் கூறுவதை உங்களில் எத்தனை பேர் கேட்டிருக்கி றீர்கள்? நிச்சயமாக, நிச்சயமாக.

*****

உங்களால் போக முடியாவிட்டால்... உங்களால் இந்த கூடாரத்துக்கு வர முடியா விட்டால் எங்காவது ஒரு சபையைத் தெரிந்து கொண்டு அங்கு போங்கள். அவர்கள் செய்யும் எல்லாவற்றையும் நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. அவர்கள் ரொட்டியின் எந்த பாகத்தைப் பரிமாறுகிறார்களோ அதைப் பெற்றுக் கொள்ளுங்கள் அவர்களுக்கு பூண்டு (garlic) இருக்குமானால், அதை விட்டு விடுங்கள். பாருங்கள்? அது உண்மை. அவர்களைச் செய்ய வைக்க என்னால் முடியாது, ஆனால் அது தான் முற்றிலும்... நிச்சயமாக, நீங்கள் சபைக்குப் போங்கள். சபை கதவு எங்கு திறவுண்டாலும், நீங்கள் முடிந்த வரையில் அங்கு

விரைந்து செல்லுங்கள். அவர்கள் விசுவாசிக் காமல் போனால், நல்லது... இப்பொழுது, நீங்கள் பங்கு கொள்ள வேண்டியதில்லை. அவர்களைச் சேராதீர்கள், அந்த சபைகளில் ஏதொன்றையும் சேர்ந்து கொள்ளாதீர்கள்; ஆனால் அவர்களிடம் செல்லுங்கள்; அவர்களிடம் ஐக்கியம் கொள்ளுங் கள். அது கர்த்தருடைய சித்தம் அல்ல என்று உங்களுக்கு எப்படித் தெரியும்? அவர் சகலத் தையும் நன்மைக்கு ஏதுவாக செய்வாரென்று அவர் கூறியுள்ளார். ஒருக்கால் இரட்சிக்கப்பட வேண்டிய ஒரு ஆத்துமா அங்கு இருக்கக் கூடும். அப்படிப்பட்டவர்களுக்கு நீங்கள் வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் செய்யலாம். பாருங்கள்? அங்கு செல்லுங்கள். அப்பொழுது ஜனங்கள், “அவள் மிகவும் நல்ல கிறிஸ்தவ பெண்மணி, அவர்கள் மிகவும் ஒரு நல்ல கிறிஸ்தவ தம்பதிகள்; அவன் மிகவும் ஒரு நல்ல கிறிஸ்தவ பையன், அவள் மிகவும் நல்ல கிறிஸ்தவ பெண்” என்று சொல்ல முற்படுவார் கள். “என்னே, அவர்களுடன் சம்மந்தம் கொள்ள எனக்குப் பிரியம்... அவர்களுக்கு ஏதோ ஒன்று

உள்ளது போல் அவர்கள் உண்மையில் நடந்து கொள்ளுகிறார்கள். அது என்ன?” என்பார்கள்.

அப்பொழுது நீங்கள், “இதுதான் அது” என்று அவர்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள். நீங்கள் உப்பாயிருங்கள், அப்பொழுது அவர்களுக்கு தாகமுண்டாகும்.

**கேள்விகளும் பதில்களும் (2:19), ஆகஸ்ட் 23, 1964 காலை, பத்தி எண் 208–210, 214, 215**

இன்று நடைபெறுபவைகளைக் காணும்போது எனக்கு வியப்பு தோன்றுகிறது. நாம் உண்மை யாகவே ஜனங்களை தேவனிடம் கொண்டு வருகிறோமா, அல்லது சபைகளுக்கு வழிநடத்து கிறோமா? உயிர்ப்பிக்கும் வல்லமை கொண் டுள்ள கிறிஸ்துவினிடம் அவர்களை நாம் கொண்டு வரவேண்டும். சபைக்கு செல்வது நல்லதுதான், நிச்சயமாக. அவ்வளவு தூரம் தான் நாம் செல்ல முடியுமானால், அது போதாது. நாம் இன்னும் தூரம் போக வேண்டியவர்களாயிருக் கிறோம். நீங்கள் சபைக்கு செல்வது நல்லது. ஆனால் சபையிலிருந்து கிறிஸ்துவினிடம் செல்லுங்கள். ஏனெனில் உயிர்த்தெழுதலில் நாம்

பங்கு கொள்ள வேண்டுமென்று எதிர்பார்த்தால், அந்த உயிர்ப்பிக்கும் வல்லமையை நாம் நிச்சயம் பெற்றிருக்க வேண்டும். அது ஒன்று மாத்திரமே நம்மை மரித்தோரிலிருந்து உயிரோடெழச் செய்யும். "இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமா யிருந்தால், சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களை அது உயிர்ப்பிக்கும் – உயிரோடு கொண்டு வரும்." என்னே ஒரு வாக்குத்தத்தம்!

**ஈஸ்டர் முத்திரை, பக்கம் 14**

எது ஒரு சபையை உருவாக்குகிறது. அது வெறும் கட்டிடமல்ல. அதின் கீழ் தேவனை தொழுதுகொள்ளும்படி கூடி வருகிற ஜனங்கள் தான் அந்தச் சபைாகும். இக்காரியங்களுக்காக நாம் நன்றியுள்ளவர்களா யிருக்கிறோம்.

**இடைவெளியில் நிற்றல், ஜூன் 23, 1963, பத்தி எண் 12**

ஆனால் இப்போது, செல்வாக்கை கவனியுங்கள். சில சமயங்களில் பெரிய மனிதர்கள் ஒன்று கூடுகிறார்கள். அவர்கள் இவ்வாறு கூறுவதை நீங்கள் கேட்கலாம். பெரிய

இன்னார் – இன்னார் மற்றும் மகத்தான இன்னார் – இன்னார், நம்முடைய பெரியவர்... அதை ஒருபோதும் செய்ய வேண்டாம். நம்மில் மகத்தானவர் ஒருவரும் கிடையாது. மகத்தானவர் ஒரே ஒருவர் தான் உண்டு, அவர் தேவன். நாம் சகோதரர்களும் சகோதரிகளுமாயிருக்கிறோம். ஐந்து பேர் கொண்ட சபையின் மேய்ப்பனாக நீங்கள் இருந்தாலும் எனக்கு கவலையில்லை; அது உங்களை சிறியவராக்குவதில்லை. அது உங்களை ஒரு சகோதரனாக்குகிறது. (பாருங்கள்?) நீங்கள் தேவனுடைய வார்த்தைக்கு உண்மையாயிருப்பீர்களானால். என்ன எப்படி என்பதைக் குறித்து கவலையில்லை. நீங்கள் குறைவாகப் பெற்றுக் கொள்வதில்லை. தேவனுக்கு சிறு பிள்ளைகளென்றும் பெரிய பிள்ளைகளென்றும் இல்லை. அவருக்கு பிள்ளைகள் மட்டும் உண்டு; அவர்களனைவரும் ஒன்றாகவேயிருக்கிறார்கள்.

**தேவசித்தத்திற்குப் புறம்பாக அவருக்கொரு சேவை செய்தல், ஜூலை 18, 1965, பத்தி எண் 103**

எங்கள் பரலோகப்பிதாவே, நாங்கள் இங்கு ஒன்று கூட வேண்டுமென்று நீர்

தீர்மானித்திருக்கிறீர். நாளானது சமீபித்து வருகிறதை நாம் காணும்போது, ஒழுங்காக நாம சபை கூட வேண்டுமென்பது தேவனுடைய சித்தமாயுள்ளது. அதன் மூலம் நாங்கள் உமக்கு அருகிலும், ஐக்கியங்கொண்டு ஒருவருக் கொருவர் அருகிலும், சிந்தப்பட்ட இயேசுவின் இரத்தத்தினால் வரமுடிகிறது.

**சகலத்தையுமுடையவர்களாக இருத்தல், மே 6, 1962**
**பத்தி எண் 30**

நீங்கள், நீங்கள் தேவனை ஆராதிக்க ஒன்றுகூட வேண்டியதாயிருக்கிறது; வேதம், “நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய் பார்க்கிறோமோ அவ்வளவாய் ஒன்றுகூடி வரவேண்டும்” என்ற வண்ணமாக கூறியுள்ளது. இங்கே இருவர் மட்டுமே இருக்கிறார்க ளென்றால், அவர்களில் நீங்கள் ஒருவராய் இருங்கள். இப்பொழுது அதாவது... நாம் ஒன்றாக கூடிவந்து ஒன்று சேர்ந்து ஆராதிப்போமானால், அப்பொழுது நாம் அதைக் குறித்த மற்ற ஏதோ ஒன்றை பெற தகுதியுடையவர்களாய் இருப்போம், இயேசு, “இரண்டு பேராவது, மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்

களோ, அங்கே அவர்கள் நடுவில் இருக்கிறேன்” என்றார்.

**எனக்காக நீங்கள் எப்படிப்பட்ட வீட்டைக் கட்டுவீர்கள்?, நவம்பர் 21, 1965, பத்தி எண் 34**

நம்முடைய தவறு எங்குள்ளது என்று கண்டு அதைச் சரி செய்வதற்காக நாம் ஆலயத்திற்கு வருகிறோம். ஏனெனில் நாம் சிறு சிறு காரியங்களை செய்கிறவர்களாயிருக்கிறோம். வேறு ஏதாகிலும் ஓர் நோக்கத்திற்காக நாம் ஆலயத்திற்கு வருகிறோமென்றால் இங்கிருந்து பிரயோஜனமான ஏதாகிலும் நாம் பெற்றுக் கொள்ள இயலாது என நான் அஞ்சுகிறேன். நம்முடைய தவறான பாகம் எது என்றும், நம்முடைய பலவீனம் எது என்றும் நாம் எவ்வளவு சிறியவர்கள் என்பதையும் கண்டு நம்முடைய நம்பிக்கையை பலமுள்ள ஒருவரிடம் ஒப்படைக்கும் நோக்கத்திற்காக கண்டிப்பாக சபைக்கு வரவேண்டியவர்களாயிருக்கிறாம்.

**பரிபூரண பலவீனத்தினால் விளங்கும் பரிபூரண பலம், நவம்பர் 19, 1961, பத்தி எண் 43**

★★★★★